# நான் அங்கம் வகிக்க விரும்பும் சபை [2:42-47]

*கடந்த பாடத்தில் நாம், பெந்தெகொஸ்தே நாளன்று மூவாயிரம் பேர் வசனத்தை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றதைக் கவனித்தோம். விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதென்பது, கிறிஸ்துவுடனான நமது உறவின் தொடக்கமே ஆகும்: அதன் பிறகு நாம் கிறிஸ்துவுடன் நடக்க வேண்டியது தேவை. இவ்வதிகாரத்தின் நிறைவு வசனங்கள் (வ. 42-47), "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாய்" (1 கொரி. 3:1) இருந்த அவர்கள், நடக்க கற்றுக் கொண்டது எப்படி என்பதைக் கூறுகின்றன.*

*இவ்வசனங்களைக் கற்றுக் கொள்ளுகையில், நாம் ஒரு அசாதாரணமான சபையின்-கர்த்தருக்கென்று அக்கினியாய் இருந்த புதிய கிறிஸ்தவர்களால் ஆன ஒரு சபையின் வடிவத் தைக் காணுகிறோம். அந்த ஐக்கியத்தின் ஒரு பாகமாய் இருப் பதை நான் எவ்வளவாய் விரும்புகிறேன்! இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த குழுவின் அநேக பண்புகளைக் குறிப்பிட முடியும். அது ஒரு கற்றுக்கொள்ளும் சபையாக, ஒரு ஐக்கியமுள்ள சபையாக, ஒரு ஜெபிக்கும் சபையாக, ஒரு செயல்படும் சபையாக மற்றும் ஒரு வளரும் சபையாக இருந்தது. "நான் அங்கம் வகிக்க விரும்புகின்ற ஒரு சபையின்" இந்த ஐந்து பண்புகளை நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.*

## ஒரு ஆராதிக்கும் சபை (2:42)

*(ஆங்கில வேதாகமத்தில்) வசனம் 42ன் தொடக்கத்தில்* "and" *என்ற வார்த்தை, இவ்வசனத்தை இதற்கு முன் உள்ளவற்றோடு பிணைப்பதைக் கவனியுங்கள்.*[1] *அந்த மூவாயிரம் பேரும் ஞானஸ்நானம் பெற்ற உடனே, புதிய கிறிஸ்தவர்களாக உடனடியாக செயல்படத் தொடங்கினர், மற்றும் சரீரத்தின்*

*உறுப்பினர்களாக உடனே ஆயினர். அவர்கள் என்ன செய்தனர்? வசனம் 42, பின்வரும் சுருக்கத்தை அளிக்கின்றது: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும்,[2] அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்."*

*சபை நிலைநாட்டப்பட்ட போது, உடனடியாக அதற்கு அறிவுரைகளின் தொகுப்பு[3] எதுவும் வழங்கப்படவில்லை. மாறாக, சபையின் உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் எதை விசுவாசிக்க வேண்டும், மற்றும் அவர்கள் என்ன செய்ய வேண்டும்[4] என்று போதிப்பதற்கு அப்போஸ்தலர்களை ஆரம்ப கட்டத்தில் தேவன் கொடுத்திருந்தார். இயேசு, தமது அப்போஸ்தலர்களுக்கு, அவர்கள் மக்களை ஞானஸ்நானப் படுத்திய பிறகு, அவர் கட்டளையிட்டயாவையும் அவர் களுக்கு உபதேசம் செய்யும்படிக் கட்டளையிட்டிருந்தார் (மத். 28:19, 20). இதைச் செய்வதில் அவர்கள் மகிழ்வடைந்த னர், மற்றும் ஞானஸ்நானம் பெற்றவர்கள், அவர்களுடைய போதனையைக் கேட்பதில் மகிழ்வடைந்தனர். அந்தப் புதிய கிறிஸ்தவர்கள், வாழ்க்கையின் புதிய வழியைப்பற்றிக் கற்றுக் கொள்ள ஆவலாயிருந்தனர். இவ்விதமாய் அவர்கள் தேவனுக் காகப் பேசுபவர்களின் போதனையை கவனிக்கத் தொடர்ந்து தங்களை ஒப்புக் கொடுத்தனர்.[5] இன்றைய நாட்களில் அதே போதனையானது ''புதிய ஏற்பாட்டின் நூல்களில் கிடைக் கின்றது'' என்று லூயிஸ் பாஸ்ட்டர் விளக்குகிறார். அந்தக் கிறிஸ்தவர்களைப் போலவே, தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள, நாம் ஆவலுள்ளவர்களாய் இருக்கின்றோமா? உண்மையாகவே நாம் வசனத்தைப் படிக்கவும், கற்கவும் நம்மை ஒப்புக் கொடுக்கின்றோமா? அதை நாம் தொடர்ந்து செய்கின்றோமா?*

*''உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' என்ற வார்த்தை களானவை வசனம் 42ல் கூறப்பட்டுள்ள நான்கு செயல் பாடுகளுக்கும் பயன்படுபவைகளாகும். அடுத்து, புதிய கிறிஸ்தவர்கள் "ஐக்கியத்தில்" உறுதியாய்த் தரித்திருந்தார்கள். ''ஐக்கியம்'' என்ற வார்த்தை koinonia என்ற ஒரு சிறப்பான கிரேக்க வார்த்தையின் மொழியாக்கமாகும். Koinonia என்பதன் மூலப்பொருள், "பொதுவாகப் பெற்றிருத்தல்" என்பதாகும். சில*

சமயம் இது "பகிர்ந்து கொள்ளுதல்"[6] என்றும் மொழியாக்கம் செய்யப் படுகின்றது. நாம் ஒரு பொதுப் பிணைப்பைப் பகிர்ந்து கொள்ளுகிறவர்களை இவ்வார்த்தையால் குறிப்பிட முடியும். ஆகையால், நாம் தேவனோடும், கிறிஸ்துவோடும், பரிசுத்த ஆவியானவரோடும்[7] மற்றும் உள்ள கிறிஸ்தவர்களோடும் ஐக்கியம் கொண்டுள்ளதாகப் படிக்கின்றோம் (1 யோவா. 1:7). Koinonia என்ற வார்த்தையை நமது பொதுப் பிணைப்பிற்கான ஒரு விளக்கமாகவும் குறிப்பிட முடியும். இந்த வார்த்தை புதிய ஏற்பா ட்டில் 1 கொரி. 10:16ல் (KJV)[8] "ஐக்கியம்" மற்றும் ரோமர் 15:26ல் "பொருள் சகாயம்" (இ.வ. 2 கொரி. 9:13) என்பவை உட்படப் பலவகையில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பது மற்றும் கொடுப்பது ஆகியவற்றில் ஈடுபடுகையில், நாம் நமது பொதுவான விசுவாசத்தை விளக்கப்படுத்துகிறோம்.[9]

Koinonia என்ற வார்த்தை, புதிய ஏற்பாட்டில் பொருளாதார ஐக்கியத்தைக் குறிக்க அடிக்கடி பயன்படுத்தப்படுவதாலும், வசனம் 44ல் ஆதி கிறிஸ்தவர்கள் "சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்" என்று கூறப்படுவதாலும், கற்றறிந் தவர்கள் சிலர் இவ்விடத்தில், பணம் தொடர்பான ஐக்கியமே அடிப்படைக் கருத்தாக உள்ளது என்று நம்புகின்றனர். இவ்வசனத்தில் உள்ள koinonia என்ற வார்த்தையானது சில மொழிபெயர்ப்புகளில் "கொடுத்தல்" அல்லது அதற்குச் சமமான வார்த்தைகளாகக் கூட மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.[10] இந்தச் சொல் விளக்கத்தைப்பற்றி இன்னும் சற்று விரிவாக எண்ணிப் பார்ப்பது அநேகமாக மிகவும் நல்லது; உலகப் பொருட்களைப் பகிர்ந்து கொள்வது இதில் உள்ளடங்கி யுள்ளது, ஆனால் இது இயேசுவுக்குள்ளாக உள்ள கிறிஸ்தவர் களின் முழு நிறைவான புதிய வாழ்க்கையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. புதிய ஆங்கில வேதாகமம் இக்கருத்தைப் பின்வருமாறு விளக்குகின்றது: "பொது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும்படி ... அவர்கள் தொடர்ந்து கூடினர்." அவர்களைப் போன்றே நாமும் மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்ள வேண்டும். நமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கும் நமது சகோதர சகோதரிகளைப்பற்றி அறிந்து கொள்வதற்கும் நாம் நம்மை ஒப்புக் கொடுத்துள்ளோமா?

*மூன்றாவதாக, புதிய கிறிஸ்தவர்கள் “அப்பம் பிட்குதலில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.” “அப்பம் பிட்குதல்” என்பது கர்த்தருடைய இராப்போஜனத்தைக் குறிப்பிட முடியும் (20:7; 1 கொரி. 10:16)[11] அல்லது ஒரு பொது விருந்தைக் குறிப்பிட முடியும் (2:46). இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருள், லூக்கா, கர்த்தருடைய இராப்போஜனத்தைப்பற்றியே பேசுகிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.[12] பின்வரும் பகுதி யொன்றில், ஆதிசபையார் வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படிக் கூடி வந்தனர் என்று நாம் கவனிக்கவிருக்கிறோம் (அப். 20:7). உறுதியாகவே, இந்தப் பழக்கமானது உடனடி யாகத் தொடங்கிற்று, கிறிஸ்துவுக்குள்ளான இக்குழந்தைகள் வாரத்தின் முதல் நாள்தோறும் விசுவாச நிறைவோடு இந்தப் பந்தியில் கலந்து கொள்வதில் உறுதியாய் தரித்திருந்தனர். இந்நாட்களில் சிலர் கர்த்தருடைய மரணத்தை ஒழுங்கின்றி நினைவு கூருவதை நான் கவனிக்கையில், அப்பம் பிட்குதலில் உறுதியாய்த் தரித்திருந்த ஆவி புதுப்பிக்கப்பட வேண்டும் என்று ஏங்குகின்றேன்!*

*வசனம் 42ல் நிறைவாகக் கூறப்பட்ட விஷயம் ஜெபம் ஆகும்: “அவர்கள் ஜெபம் பண்ணுவதில் உறுதியாய்த் தரித் திருந்தனர்.” சபையானது ஜெப சூழ்நிலையில் தொடங்கியது, அது ஜெப சூழ்நிலையிலேயே தொடர்ந்து இருந்தது. ஆதிகிறிஸ்தவர்கள் ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் கர்த்தரைச் சந்தித்ததால், ஒவ்வொரு நாளும் வாழ்க்கையில் ஏற்பட்ட சவால்களை அவர்களால் சந்திக்க முடிந்தது.*

*வசனம் 42ல் நான் பார்க்கும் கருப்பொருள், ஆராதனையின் கருப்பொருள் ஆகும். மக்கள் ஞானஸ்நானப்படுத்தப்பட்ட போது, தேவனை ஆராதிப்பதில் அவர்கள் ‘‘உறுதியாய்த் தரித்திருந்தார்கள்”! இவ்விடத்தில் நமக்கு ஒரு பாடம் உள்ளது: ஆராதனை என்பது கர்த்தருக்கு நம்மை ஒப்புக் கொடுத்தலை விளக்கும் மையப் பகுதியாகும், அது கிறிஸ்தவ வளர்ச்சியின் இருதயமாகவும், தேவனுக்கு நாம் விசுவாசத்தோடு நிலைநிற்ற லின் முக்கிய அம்சமாகவும் விளங்குகின்றது! இது இணைந்து செய்த ஆராதனையாக இருந்தது என்பதையும் கவனியுங்கள். கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள், சகோதரிகள் யாவரும் இணைந்து ஆராதித்தனர். ஒருவருக்கொருவரும், தேவனு*

டனும் நெருங்கி வளருவதற்கு, ஒன்று சேர்ந்து ஆராதிப்பதைக் காட்டிலும் முக்கியமானது வேறெதுவும் இல்லை. பெந்தெகொஸ்தே நாளானது வாரத்தின் முதல் நாளில் வந்தது என்பதால், மூவாயிரம் ஆத்துமாக்களும் ஞானஸ்நானம் பெற்றவுடனே, எருசலேமில் அந்தப் புதிய சபையார், தேவனுடைய வசனம் போதிக்கப்படுவதை கேட்பதற்கும், ஒன்று சேர்ந்து ஜெபிப்பதற்கும், தங்களது அன்பான இரட்சகருடைய மரணத்தை நினைவு கூருவதற்கும் அதே நாளில் கூடியிருப்பார்கள் என்பதே எனது யூகம் ஆகும்! தேவனே, எங்கள் ஆராதனை நேரத்தில் ஒன்றுகூட வேண்டும் என்ற இதே உணர்வை நாங்கள் பெற உதவி செய்யும்!

## ஒரு ஆழ்ந்த மரியாதைக்குரிய சபை (2:43)

பெந்தெகொஸ்தே நாளன்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட மூவாயிரம் பேர்களைப்பற்றிய அந்தச் சுருக்கமான கூற்றுக்குப்பின்பு, வசனம் 43 முதல் 47 வரை,[13] சபையின் ஆரம்ப நிலை வாழ்வுபற்றி லூக்கா, விரல் நுனி வரைபடம் ஒன்றைத் தருகிறார். அவர் இதை, "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று [அல்லது ஆழ்ந்த மரியாதையுண்டாயிற்று[14]], அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டன"[15] (வ. 43) என்று கூறித் தொடங்கினார். "அற்புதங்களும் அடையாளங்களும்" என்பது அப்போஸ்தலர்களால் செய்யப்பட்ட பலத்த செய்கைகளைக் குறிக்கின்றது.[16] அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் செல்லும் போது, "அடையாளங்கள்" அவர்களுக்குத் துணைபோகும் (மாற். 16:17, 18) என்பதை இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்தார்; இது அவ்வாக்குத்தத்தம் நிறைவேறுதலின் ஆரம்பம் ஆகும். பின்னால் நாம், அவர்கள் நிகழ்த்திய பலத்த செயல்களில் சிலவற்றைப் படிப்போம்.[17] இருப்பினும், இவ்விடத்தில், அது ஒரு ஆழ்ந்த மரியாதை நிரம்பிய காலம் என்று நமக்குக் கூறப்படுகிறது.

## ஒரு சுயநலமற்ற சபை (2:44, 45)

வசனம் 42ல் குறிப்பிடப்பட்ட ஐக்கியத்திற்கு வலுவான

தொரு எடுத்துக்காட்டு, வசனங்கள் 44 மற்றும் 45ல் தரப்படுகிறது: "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்."

இதற்கு முன்பு உலகம் இப்படிப்பட்டதொன்றை என்றும் கண்டிருக்கவில்லை! சபையிலிருந்த அநேகர் சில நாட்களுக்கு முன்பு ஒருவருக்கொருவர் அந்நியராயிருந்தனர். அவர்கள் மாறுபட்ட பின்னணி மற்றும் கலாச்சாரத்திலிருந்து வந்தவர்கள். அப்படியிருந்தும், உடனடியாக அவர்கள் ஒருவர் மீதொருவர் அக்கறையுள்ளவர்களாகி, பலவீனர் மற்றும் உதவியற்றவர்கள் மீது விசேஷ கவனம் செலுத்தினர்! நியாயப்பிரமாணம், உதவி தேவைப்படுபவர்கள்மேல் அக்கறை கொள்ளும்படி போதித்திருப்பினும், யூதர்கள் அவர்களைப் புறக்கணித்திருந்தனர். குறைவுள்ளோர்களைப்பற்றிப் புறஜாதியார் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. இயேசுவைப் பின்பற்றியவர்கள், முழு சமூகத்தினரின் இருதயங்களில் ஆழப் பதிந்ததில் வியப்பெதுவும் இல்லை (2:47).

வசனங்கள் 44 மற்றும் 45 ஆகியவை கிளர்ச்சியூட்டும் மற்றும் அறைகூவல் விடுக்கும் வசனங்கள் ஆகும். துரதிர்ஷ்டவசமாக, இவைகள் தகாத வகையிலோ அல்லது தவறான வகையிலோ பயன்படுத்தப்படுகின்றன. இந்த வசனங்களைச் சிலர், "கிறிஸ்தவப் பொதுவுடைமைக் கொள்கையின் ஒரு எடுத்துக்காட்டு" என்று அழைத்துள்ளனர். கற்பனைச் சமுதாயத்தை[18] உருவாக்க விரும்பும் மனிதர்கள், தங்கள் முயற்சிகளை நியாயப்படுத்த இவ்வாறு கூறியுள்ளனர். சமயத் தலைவர்கள், தங்களைப் பின்பற்றுவோர் தங்களிடம் உள்ள எல்லாச் சொத்துக்களையும் விற்று, அதன் வரவுகள் யாவற்றையும் அவர்களிடம் ஒப்படைத்துவிடும்படி வலியுறுத்துவதற்கு இவ்வசனங்களைப் பயன்படுத்துகின்றனர். லூக்கா இவ்விடத்தில் என்ன கூறினார் என்பதையும், என்ன கூறவில்லை என்பதையும் நாம் புரிந்துகொள்வது தேவை.

முதலாவதாக, சபையின் உறுப்பினர் தமக்குச் சொந்தமான யாவற்றையும் விற்று, அதைப் பொதுநிதி ஒன்றில் போட்டு விட

வேண்டுமென்று லூக்கா கூறவில்லை. ''சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்'' என்ற வார்த்தைகளை மட்டும் பார்த்தால் நாம் அப்படித்தான் எண்ணக்கூடும்.[19] வசனம் 45ன் சிந்தனையை NASB எவ்விதம் விளக்கப்படுத்து கிறது என்று பாருங்கள்: ''அவர்கள் தங்கள் காணியாட்சி களையும், ஆஸ்திகளையும் விற்கத் தொடங்கி, அவைகளை ... பகிர்ந்து கொண்டனர்.''[20] பின்பு வசனம் 46ஐக் கவனியுங்கள்: ''சபை உறுப்பினர்கள் யாவரும் 'வீடுகள்தோறும்' அப்பம் பிட்டனர்.'' எல்லா கிறிஸ்தவர்களும் உடனடியாக அவர்கள் வீடுகளை விற்றிருந்தால், யாருடைய வீடுகளில் அவர்கள் ஒன்று கூடியிருப்பார்கள்? ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின், அதிகாரம் 4 மற்றும் 5ல், ஆஸ்திகளை விற்கும் நடைமுறை யானது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. அதற்கும் பின்னால் கூட, எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் ''மரியாளு டைய வீட்டில்'' ஜெபம் செய்யக் கூடினார்கள் (12:12). அப்பெண்மணி அப்பொழுதும் கூட தமது வீட்டின் உரிமை யாளராய் இருந்தார்கள். எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் உடனடியாகப் புறப்பட்டுச் சென்று பொது நிதியில் போடுவதற்கென்று தங்களிடம் உள்ளவற்றையெல் லாம் விற்று விடவில்லை.

மறுபடியும் லூக்கா, புதிய கிறிஸ்தவ ''சமுதாயத்தில்'' உறுப்பினராவதற்கு எல்லா சொத்துக்களையும் நன்கொடை யாகக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று அப்போஸ் தலர்கள் நிர்ப்பந்தம் செய்ததாகக் கூறவில்லை. 5ம் அதிகாரத் தில், அனனியாவும், சப்பீராளும் தங்கள் சொத்துக்களை விற்ற அனைத்துப் பணத்தையும் கொண்டு வந்ததாக நடித்தபோது, பேதுரு, அனனியாவிடம்: ''... நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்க வில்லையோ?'' (5:3, 4) என்று கேட்டார்.

வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால், அவர்கள் நிலத்தை விற்குமுன்பு அதைத் தங்கள் இஷ்டப்படிச் செய்ய நிலம் அவர்கள் வசம் இருந்தது மற்றும் அவர்கள் நிலத்தை விற்ற

பின்பும், அதன் கிரயப்பணம் அதைத் தங்கள் இஷ்டப்படிச் செய்யும்படி அவர்கள் வசம் இருந்தது. முழுக்கிரயத் தொகையையும் கொண்டுவரத் தவறியது அவர்களின் பாவமல்ல; முழுவதையும் கொண்டுவந்ததாக நடித்ததே அவர்கள் செய்த பாவமாகும்.[21] கிறிஸ்தவ ஐக்கியத்தில் ஒரு பாகமாயிருக்க ஒவ்வொரு உறுப்பினரும் தம்மிடம் உள்ள யாவற்றையும் நன்கொடையாகத் தந்துவிட வேண்டும் என்று எவ்விடத்திலும் நமக்குச் சுட்டிக்காட்டப்படவில்லை;[22] இவ்விதம் நடைபெறவில்லை என்பதற்கு அநேக சான்றுகள் உள்ளன.

மற்றவர்களுக்கு உதவி செய்வதற்காகத் தங்களின் சொத்துக்களை விற்பது என்பது நிச்சயமாகவே இந்தக் கிறிஸ்தவர்களின் சுயவிருப்பத்தைப் பொறுத்ததாகவே இருந்தது. பர்ட்டன் காஃப்மனின் விளக்கவுரையை நான் விரும்புகிறேன்: “இது நடபடிகளின் பொதுவுடைமைக் கொள்கை செயல்பாடு என்பதாக அழைக்கப்படுமானால் இவ்விஷயமானது … இந்நாட்களில் உலகப் பொதுவுடைமைக் கொள்கையுடன் நேரடியான அதே தொடர்புடையதாக, அதாவது கள்வன் ஒருவனின் கையில் உள்ள துப்பாக்கியும் காணிக்கைத் தட்டும், சமமானவையாகவே இருக்கும்.”

கிறிஸ்தவர்கள் உடனடியாக எல்லாவற்றையும் விற்றுவிட்டனர் என்றோ அல்லது அவர்களுடைய யாவற்றையும் விற்றுவிடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர் என்றோ கூறவில்லையென்றால், இவ்விடத்தில் லூக்கா கூறியதுதான் என்ன? முதலாவதாக, புதிய கிறிஸ்தவர்கள் ஒரு விசேஷித்த அறைகூவலைச் சந்திக்க வேண்டியிருந்தது என்று அவர் கூறினார். நாகரிக உலகின் எல்லா பகுதிகளிலுமிருந்து யூதர்கள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு வந்திருந்தனர். இவர்களில் பலர் ஞானஸ்நானம் பெற்றனர். அவர்கள் அனைவரும் இல்லாவிடினும் அநேகர் அப்பகுதியிலேயே இருந்தனர்.[23] அவர்கள் எவ்வளவு தொகை கொண்டு வந்திருந்தாலும் அது விரைவில் செலவழிந்து போயிருக்க வேண்டும். அவர்கள் எருசலேமில் வியாபாரம் செய்ய ஒரு வரையறைக்குட்பட்ட வாய்ப்புகளே இருந்திருக்கும். ஒருவேளை பலருக்குப் பொருளாதார உதவி தேவைப்பட்டிருக்கும்.[24] இது ஒரு திட்டமிட்ட சூழ்நிலை அல்ல, மாறாக தானாக எழுந்த

*ஒன்றாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ''ஒவ் வொருவரும் தமது தகுதிக்குத் தக்காற்போன்று கொடுக்கவும், தமது தேவைக்குத் தக்காற்போன்று பெற்று கொள்ளவுமான ஒரு முழுமையான சமுதாயத்தை'' உருவாக்குவதற்காக கிறிஸ்தவர்களின் குழு ஒன்று இணைந்து முடிவு செய்யவில்லை. எருசலேமில், ஆரம்ப வருடங்களில் எழுந்த சூழ்நிலையானது ஒரு தனிவகைப்பட்டதாகும்; அதைத் தொடர்ந்து வந்த வருடங்களில் வேறு எவ்விடத்திலும் இது போன்று சூழ்நிலை உண்டாகவில்லை. எருசலேமிலிருந்து சபை சிதறியபோது, இதே வழிமுறையில், தேவைப்பட்ட உறுப்பினர்களுக்குக் கிறிஸ்தவர்கள் உதவி புரிந்ததாக நாம் மறுபடியும் எவ்விடத் திலும் படிக்கவில்லை.*

*இது, இவ்விடத்தில் நாம் கற்றுக்கொள்ளப் பாடம் ஒன்றும் இல்லை என்று பொருள்படாது. இந்தப் பதிவு பாதுகாத்து வைக்கப்பட்டிருப்பதிலிருந்து, அவர்களின் செயல்மூலம் சிலவற்றை நாம் கற்றுக்கொள்ளும்படி தேவன் விரும்புகிறார் என்பதைத் தெளிவாக்குகின்றது: நமது சகோதரர் தேவையி லிருக்கும்போது,[25] நாம் - நம்மிடம் உள்ளவைகளை விற்று விட நேர்ந்தாலும் - அவருக்கு உதவி செய்யத் தயாராக இருக்க வேண்டும்!*

*மறுபடியும் வசனம் 44ல் லூக்கா: "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித் தார்கள்.'' ''சகலத்தையும் பொதுவாய் வைத்து'' என்பது அவர்கள் உடனடியாகத் தங்கள் சொத்துக்களையெல்லாம் விற்று தங்கள் வருவாய் அனைத்தையும் அளித்தனர் என்று பொருள்படாது என்பதை நாம் கவனித்தோம். பிறகு இது எதைக் குறிக்கிறது? இச்சொற்றொடரானது ஆதி கிறிஸ்தவர் களின் அடிப்படையான நடவடிக்கையை விளக்குகிறதென்று நான் ஆலோசிக்கிறேன். தங்களுடைய உரிமைப் பொருள் எதுவும் தங்களுடையதல்லவென்றும், அவை யாவும் தேவனு டையவைகள் என்றும் அவர்கள் புரிந்துகொண்டனர் (சங். 50:10-12); அவர்கள் தேவனுடைய உரிமைப் பொருட்களின் உக்கிராணக்காரர்களாக மட்டுமே இருந்தனர் (1 கொரி. 4:2). கிறிஸ்துவுக்குள்ளான அவர்களின் சகோதர சகோதரிகளுடன் ஒரு பொதுவாழ்வை ("ஐக்கியத்தை") அவர்கள் பெற்றிருந்த*

*தால், அவர்களின் உரிமைப் பொருட்களும் பொதுவான வையே என்று அவர்கள் எண்ணியது இயல்பானதே. தேவைப்படும் வகையில் தங்கள் உடைமைகளைப் பயன் படுத்த அவர்கள் தயாராக இருந்தனர். அவர்களின் சகோதரர் களுக்குத் தேவைகள் இருந்ததால், அவர்கள் தங்கள் உடைமை களை (எவ்வகையிலும் அவைகள் பிதாவுக்குச் சொந்தமான வைகள்) அவர்களின் தேவைகளைச் சந்திப்பதற்காக விற்றனர்.*

*நமக்கான இதன் பயன்பாடு 1 யோவா. 3:17ல் உள்ளது: "ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடைவனாயிருந்து, தன் சகோத ரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?"[26] இவ்வினாவிற்கான விடை தெளிவாயுள்ளது: எனது சகோதரனுக்கு உண்மையான தேவை இருந்து, என்னிடத்தில் அவருக்கு உதவி செய்யத் தகுதியும் இருந்து, நான் அதைச் செய்யாமற்போனால், தேவ அன்பு என்னில் நிலை கொள்ளாது! தேவனே, எங்கள் சகோதர சகோதரிகளின் தேவைகளைப்பற்றிய உணர்வை நாங்கள் அடையவும், அவர்களுக்கு - அதற்கு எங்கள் சொந்த தியாகம்[27] தேவைப்பட்டாலும் - உதவி செய்ய எங்களுக்கு உதவும்!*

## *ஒரு மகிழ்ச்சியான சபை (2:46, 47)*

*ஆதி கிறிஸ்தவர்களின் ஆரம்ப நிலை வரைபடத்தை வசனங்கள் 46 மற்றும் 47 ஆகியவை நிறைவு செய்கின்றன:*

> அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்[28] தேவாலயத்தில் அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும்[29] அப்பம் பிட்டு[30] மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும்[31] போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.

*நான் சிறு பையனாயிருந்த நாள் முதற்கொண்டே, "இரட்சிக்கப்படவேண்டுமென்றால், ஒருவர் புதன்கிழமை இரவு[32] வரவேண்டுமா?" என்ற வினாவைப்பற்றிய விவாதத் தைக் கேட்டிருக்கிறேன். ஆதி கிறிஸ்தவர்கள், இவ்வினா*

*பொருத்தமற்றது என்று எண்ணியிருக்க வேண்டும். அவர்கள் அநுதினமும் தங்கள் சக கிறிஸ்தவர்களைச் சந்தித்தனர்! அவர்கள் நாள்தோறும் தேவாலயத்தில் சந்தித்தனர், அதுவே அவர்கள் யாவரும் கூடிவரக்கூடிய அளவு பெரிய இடமாகவும், "அப்போஸ்தலருடைய உபதேசத்தில்" தரித்திருக்கும் இடமாகவும் இருந்தது (2:42).[33] அவர்கள் தங்கள் சகோதர சகோதரிகளுடன் நெருங்கிப் பழகவும், ஒருவர் ஒருவருடைய உணவுகளை ருசி பார்க்கவும்[34] நாள்தோறும் அவர்கள் வீடுகளிலும் கூடினர். மேலும் அவர்கள், ''மகிழ்ச்சியோடு ஒன்றாய் உணவருந்துவதில்'' சந்தோஷப்பட்டனர்; தேவனுடைய கிருபையினால் அவர்கள் நரக அக்கினிகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டிருந்தனர். சந்தோஷம் அவர்களின் இருதயங்களில் நிறைந்திருந்தது! மற்றவர்களும் இதே சந்தோஷத்தினால் நிறையும்படி ஈர்க்கப்படுவது இயல்பாகும்; வேறு விதமாய் செய்தால் அதுவே இயல்பற்றதாகும். (அவர்கள் ஒருவருக்கொருவர் நீடிய பொறுமையோடு மட்டுமல்ல, ஒருவர் ஒருவரின் மூலம் மகிழ்ச்சியும் அடைந்தனர்!)*

*நமது பாவங்களறச் சுத்திகரிக்கப்பட்டபோது உண்டான மனவெழுச்சிகளை மறக்குமளவுக்கு (2 பேது. 1:9) நம்மில் சிலர் நீண்டகாலக் கிறிஸ்தவர்களாய் இருக்கிறோம், மற்றும் அந்த மகிழ்ச்சிபற்றிய விசேஷித்த உணர்வை நம்மில் சிலர் இழந்துவிட்டோம். நாம் தாவீதுடன் சேர்ந்து, "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தாரும்" (சங். 51:12) என்று ஜெபிக்கத் தேவைப்படலாம்.*

## *ஒரு பகிர்ந்துகொள்ளும் சபை (2:46, 47)*

*ஆதி கிறிஸ்தவர்களின் ஐக்கியம் மற்றும் உணர்வுகள் மேலோங்கிய நிலை ஒருபொழுதும் கவனிக்கப்படாது விடப்படவில்லை. இயேசு, "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்'' (யோவா. 13:35) என்று கூறியிருந்தார். இரண்டாம் அதிகாரத்தின் இந்த நிறைவு வசனத்தை வாசிக்கையில் நாம் வியப்படைவதில்லை: "அவர்கள் ... ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்*

கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" (2:46, 47). "அநுதின மும்" என்ற சொற்றொடரானது, கிறிஸ்தவர்கள் ஒருமனப் பட்டவர்களாய் தரித்திருந்ததற்கும் (2:46) மற்றும் மக்கள் நாள்தோறும் அவர்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டதற்கும் (2:47) ஆகிய இவ்விரண்டு உண்மைகளையும் குறிப்பிடப் பயன்பட்டுள்ளது, ஏதோ தற்செயலானதல்ல. கிறிஸ்தவர்கள், கர்த்தருடனும், ஒருவரொருவருடனும் வலிய உறவினால் பிணைக்கப்பட்டிருந்தது மற்ற மக்களை வசீகரித்தது!

இந்நாட்களில், நடைபாதைகளிலும், பிரசங்க மேடை களிலும் எண்ணற்ற வார்த்தைகள் பெருக்கெடுத்து, "சபையை வளரச் செய்வது எப்படி?" என்று வலியுறுத்துகின்றன. தேவனுக்குப் பிரியமான வகையில் சபையை வளரச் செய்வதை[35] நடைமுறைப்படுத்துவது எப்படி என்று நாம் அறிய விரும்பினால், அப். 2:42-47ல் வலுவான பாடத்தைப் படிப்பதைத் தவிர சிறந்த வழி எதுவும் இல்லை!

## முடிவுரை

அப். 2:42-47ல் விவரிக்கப்பட்டுள்ளது போன்ற ஒரு சபையில் நாம் ஒரு பாகமாய் இருப்பது அற்புதமானதாய் இருக்காதா? நீங்கள் வேகமாய்த் தலையசைத்து ஆமோதிப் பதற்கு முன், நாம் என்னவாயிருக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் விரும்பினோமென்றால், இப்படிப்பட்ட ஒரு சபையில் நாம் ஒரு பாகமாயிருக்க முடியும் என்பதையும் கூறுகிறேன்: ஆராதனை, பயபக்தி, சுயநலமின்மை, மகிழ்ச்சி மற்றும் பகிர்ந்துகொள்ளுதல். வேதாகமம், நம்மையே நாம் பார்க்க உதவும் கண்ணாடியே தவிர, மற்றவர்களை ஆய்வு செய்ய நம்மை அனுமதிக்கும் உருப்பெருக்கி அல்ல என்பதை நினைவில் வையுங்கள். "நான் அங்கம் வகிக்க விரும்பும் சபையில்" இணையத் தகுதியுள்ள கிறிஸ்தவனாகும்படிக்கு தேவன் எனக்கு உதவி செய்வாராக.

அப். 2ல் நமது பாடத்தை நாம் அணுகியபோது, நான், "வேதாகமத்தின் சில அதிகாரங்கள் அவைகளின் மாபெரும் பண்புகளால், அவைகளை விளக்கிக் கூறும் நமது திறமைக்குச்

*சவால் விடுபவைகளாக உள்ளன" மற்றும் "அப். 2 அப்படிப் பட்ட ஒரு அதிகாரமாகும்" என்று குறிப்பிட்டேன். இவ்வதி காரத்தின் சத்தியங்களை வெளிப்படையாக எடுத்து வைக்கக் கடும் முயற்சி எடுத்துள்ளேன், ஆனாலும் நாம் முடிவுக்கு வரும் இவ்வேளையில், வேத வசனத்தின் அச்சாணி போன்ற இப் பகுதியில் அடங்கியுள்ளவைகளைச் சற்றே தொட்டிருக்கிறேன் என்று நான் ஒப்புக்கொள்ள வேண்டும். இது நமது வாழ்க்கை யின் எஞ்சியுள்ள பகுதியில் நாம் யாவரும் கற்றுப் பயனடையும் அதிகாரமாகும்.*

*அப். 2ன் இப்பாடங்களில் நான் பெற்றுள்ள ஒரே நம்பிக்கை என்னவென்றால், இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டிருக் கிறார் (கலா. 3:1) என்பதே. இயேசு சிலுவையிலறையப் பட்டார், உயிர்த்தெழுந்தார் மற்றும் தேவனுடைய வலது பாரிசத்தில் அரியணையேற்றார் என்று நாம் கண்டோம்; பிறகு, இயேசு கிறிஸ்து மூவாயிரம் பேரால் விசுவாசிக்கப்பட்டு, அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தனர்; நிறைவாக, ஆதி கிறிஸ் தவர்களின் வாழ்வில் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தப் பட்டார். நமது அன்றாட வாழ்க்கையிலும் நாம் யாவரும் இயேசுவை மேன்மைப்படுத்த தேவன் நமக்கு உதவுவாராக.*

## பிரசங்கக் குறிப்புகள்

*"ஒரு மாபெரும் கூட்டத்தைப் பெறுவது எப்படி?" என்று சுவிசேஷக் கூட்டங்களில் பிரசங்கிக்க அப். 2ஐ நான் அடிக்கடி பயன்படுத்தியுள்ளேன். மாபெரும் கூட்டம் ஒன்றைப் பெறுவதற்கு, உங்களுக்கு (1) மாபெரும் தயாரிப்பு* (Preparation) *(இவ்விடத்தில் அப். 1ஐ நான் மறுகண்ணோட்டம் செய்வேன்); (2) மாபெரும் விளம்பரம்* (Publicity) *(தேவன் ஒவ்வொருவரின் கவனத்தையும் பெற்றார்!); (3) மாபெரும் பிரசங்கம்* (Preaching) *(பேதுருவைப்போல இயேசுவைப் பிரசங்கித்தல்); மற்றும் (4) மாபெரும் அறிந்துணரும் பண்பு* (Perception) *(நாம் மாபெரும் விளைவுகளைப் பெறுவதற்கு நேர்மையுடன் கேட்பவர்கள் தேவை) ஆகியவை தேவை. ("மாபெரும் ஊதியம்"* [pay off] *என்ற வார்த்தைகளை உங்களுக்கு ஐந்தாவது*

“P” தேவையெனில் பயன்படுத்தலாம்). இந்த கருத்துக்கள் ஒவ்வொன்றும் அக்கூட்டத்திற்கு இதுவரை நாம் என்ன தயாரிப்புகள் செய்துள்ளோம், இனி செய்வதற்கு எஞ்சியுள்ள தென்ன என்று பேச எனக்கு வாய்ப்பளிக்கின்றன.

மார்க்கத் தலைவர்கள் 2:44, 45ஐத் தவறாகப் பயன் படுத்துவதற்கு மாறாக போராடவும், சபையானது சுயநல மற்றதாய், தேவையில் இருப்போருக்கு உதவுவதாய் இருக்க வேண்டும் என்பதை முயற்சிப்பதற்காகவும் ஆதி சபையார் சகலத்தையும் பொதுவாக வைத்து அநுபவித்தார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் அரிய பாடம் ஒன்றைத் தயாரிக்க முடியும். இப்பாடமானது 2:44, 45ல் தொடங்கி, பின்பு 4:32-35க் குச் செல்வதாய் இருக்கலாம்.

‘‘அநுதினமும்’’ என்ற சொற்றோடர் 2:46, 47ல் பயன் படுத்தப்பட்டுள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் இருந்து “அன்றாட சமயம்” என்ற பிரசங்கம் செய்வதற்கான தொடக்க இடமாக இது இருக்க முடியும்: அவர்கள் அநு தினமும் சந்தித்தனர் (2:46), அநுதினமும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர் (17:11), அநுதினமும் போஷித்தனர் (6:1), அநுதினமும் ஆத்தும ஆதாயம் செய்தனர் (2:47) மற்றும் அநுதினமும் எண்ணிக்கையில் பெருகினர் (2:47; 16:5).

---

குறிப்புகள்

[1]வசனம் 41ன் ஒரு பகுதியாகவே வசனம் 42 உள்ளது; வேறு வார்த்தைகளில் சொல்வதானால், வசனம் 41ன் சிந்தனைகளை இது தொடருகின்றது. [2]KJVயில் ‘‘அப்போஸ்தலருடைய உபதேசத்தில்’’ என்றுள்ளது. “உபதேசம்” என்று மொழியாக்கம் செய்யப்பட்ட கிரேக்க வார்த்தையானது “உபதேசமான” அல்லது “நடைமுறையான போதகம்” என்று பொருள்படும். [3]இதற்குப்பின் முப்பதாண்டுகள் வரை புதிய ஏற்பாட்டின் கடைசி நூல் முழுமையடையாதிருந்தது. [4]அப்போஸ் தலர்கள் மட்டுமே போதித்துக் கொண்டிருந்தனர் என்பது இதில் இணைந்துள்ளது, இது அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றனர் என்பதற்கு மற்றொரு நிரூபணமாகும். [5]“அப்போஸ்தலருடைய உபதேசத்தில் தரித்திருந்தார்கள்’’ என்ற சொற்றொடர் அவர்கள் அப்போஸ்தலர்கள் கூறியபடி செய்வதில் ஆவலுடன் இருந்தார்கள் என்பதைக் குறிப்பிடுவதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஏனெனில் இவ்வதிகாரத்தின் எஞ்சியுள்ள பகுதியில் அவர்களின் செயல்பாடுகள்

வலியுறுத்தப்படுகின்றன, நான் இவ்விடத்தில் கற்றுக் கொள்ளுதல் என்ற கருத்தை வலியுறுத்தத் தேர்ந்து கொண்டுள்ளேன். [6]கலா. 6:6; எபி. 13:16 (NASB). இதனோடு தொடர்புடைய ஒரு வார்த்தை 2 கொரி. 8:23 மற்றும் பிலேமோன் 17ல் "கூட்டாளி" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. [7]1 யோவா. 1:3; 1 கொரி. 1:9; 2 கொரி. 13:14. [8]கர்த்தருடைய இராப்போஜனத்தை "ஐக்கியப் பந்தி" என்று குறிப்பிட, நாம் இவ்வசனப் பகுதியைப் பயன்படுத்துகின்றோம், NASBயில் இது "பகிர்ந்து கொள்ளுதல்" என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. [9]இது கிறிஸ்துவில் நமது ஐக்கியத்தை வெளிப்படுத்தும் வேறொரு வகை அதாவது பொது விருந்தைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகும் (அப். 2:46ஐக் கவனிக்கவும்). ஒரு சகோதரனிடமிருந்து "ஐக்கியத்தை நீக்கிக் கொள்ளும்போது" அவருடன் இனி உண்ணக்கூடாது என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (1 கொரி. 5:11). சபையின் உறுப்பினர்கள் இணைந்து உண்ணுவதை "ஐக்கியம்" என்று குறிப்பிடுகையில், இது வசனத்தைத் தவறாகப் பயன்படுத்தவதாகாது. துரதிருஷ்டவசமாக சில சபைகளில், "ஐக்கியம்" என்ற வார்த்தை இவ்வித நிகழ்ச்சிகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது; இது சரியானதல்ல. [10]ஜீவனுள்ள வார்த்தைகள் மொழியாக்கம், இருபதாம் நூற்றாண்டின் புதிய ஏற்பாடு.

[11]"அப்பம் பிட்குதலிலும்" என்று கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பற்றிய இவ்வுண்மையான குறிப்பு இருப்பதால், இது, சிலரால் பந்தியில் கலந்து கொள்வோர் அப்பத்தில் மட்டும் பங்கேற்க வேண்டும் (குருக்கள் திராட்ச ரசம் குடித்துக் கொள்வர்) என்று "நிரூபிக்க" ப் பயன்படுத்தப் படுகிறது. பொது விருந்து என்னும் போது அங்கு அப்பம் மட்டும் இருப்ப தில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அந்த அளவிற்கு கர்த்தருடைய இராப்போஜனத்தில் அப்பம் மட்டும் இருப்பதில்லை என்பதை இச்சொற்றொடர் உணர்த்துகின்றது. இங்கு முழுச் செயல்பாட்டையும் குறிக்கின்ற ஒரு பொதுவான உருவகச் சொல் பயன்படுத்தப்படுகிறது. நாம் புளிப்பில்லாத அப்பத்திலும், திராட்ச இரசத்திலும் பங்கேற்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டார் (1 கொரி. 11:23-26). [12]கேட்டு கவனித்தல் மற்றும் ஜெபித்தல் ஆகியவை ஆராதனைக்குரிய முக்கியத்துவம் பெற்றுள்ளன. [13]வசனம் 43ல் புதிய பத்தியொன்று தொடங்கி வசனம் 47 வரை தொடர்கிறது. [14]KJVயில் "பயம்" என்றுள்ளது, இது மூல பாஷையி ன் சொல்லு க்கு சொல் தருவிக்கப்பட்டதாகும், ஆனால் "பயம்" என்பது இவ்விடத்தில் ஆழ்ந்த மரியாதை, பெரும் வியப்பு, பெரும் மதிப்பு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. [15]இச்சமயத்தில் அப்போஸ்தலர்கள் மட்டுமே அற்புதங்கள் செய்ததாகக் கூறப்படுகிறது; வேறு யாரும் இன்னமும் அற்புத வல்லமை பெற்றிருக்கவில்லை. [16]2:22ன் விவாதத்தைக் காணவும். [17]நோயாளிகளைக் குணப்படுத்துதல் (அதிகாரங்கள் 3 மற்றும் 5), அசுத்த ஆவிகளைத் துரத்துதல் (5:16), மரித்தோரைக்கூட எழுப்புதல் (9:36-41)! [18]கடந்த காலத்தில் இவ்விதமான பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அனைத்தும் தோல்வியுற்றன. [19]வசனம் 45க்கு KJVயில் இறந்த கால வினைச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது பின்வரும் கருத்தைப் பலப்படுத்துகிறது: "அவர்கள் தங்கள் உடைமைகளை விற்றனர், மற்றும் அவைகளை எல்லா மனிதர்களுக்கும் பகிர்ந்தளித்தனர் ..." மூல

பாஷையில் இது aorist (இறந்த கால) வினைச் சொல்லாயிராமல், மாறாக, இறந்த காலத்தில் தொடங்கி நிகழ்காலத்தில் நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கும் முழு நிறைவேற்ற வினைச் சொல்லாக உள்ளது. [20]NASBயில் ''தொடங்கினர்'' என்ற வார்த்தை மொழியாக்கம் செய்தவர்களால் தரப்பட்டதைக் குறிக்கும் வகையில் சாய்வெழுத்துக்களில் உள்ளது. பொருள் நிலைநிறுத்தும் வகையில் இவ்விடத்தில் இச்சொல் தரப்பட்டது சரியானதென்றே நான் நம்புகிறேன். [21]ஒருவேளை பர்னபா பெற்றுக் கொண்ட அங்கிகரிப்பை அவர்களும் பெற விரும்பியிருக்கலாம் (4:36, 37). [22]ஒருமுறை இயேசு, ஐசுவரியவானும், இளைஞனுமாயிருந்த ஒரு தலைவனிடம், அவனுக்குள்ளதையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, பின்பு வந்து தம்மைப் பின்பற்றும்படி அறைகூவல் விடுத்தார் (லூக். 18:18-25). ஆயினும் இது ஒரு தனிப்பட்ட இளைஞனிடம் விடுக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட அறைகூவல் தானே தவிர, இது கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவருக்கும் விடப்பட்ட அறைகூவல் அல்ல. மதத் தலைவர்கள், அவர்களைப் பின்பற்றுவோர், தங்களின் எல்லா உடைமைகளையும் கையளிக்க வேண்டும் என்று வலியுறுத்த இந்நிகழ்ச்சியைப் பயன்படுத்தினால், இயேசு அவைகளை ஏழைகளுக்குக் கொடுக்கும்படி கூறினாரே தவிர இவர்களிடம் கொடுக்கும்படி கூறவில்லை என்று குறிப்பிட நான் விரும்புவேன்! [23]புதிய கிறிஸ்தவர்கள் (அனைவரும் இல்லையென்றாலும்) பலர் எருசலேமிலேயே இருந்திருக்க வேண்டும் என்பது உறுதி, ஏனெனில் அப். 8:1-4 வசனப்பகுதியானது, சவுல் உபத்திரவப்படுத்தி சபையைச் சிதறடிக்கும் வரையில் சுவிசேஷமானது சுற்றுப்புறப் பகுதிகளில் பரவவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. [24]பின்வரும் அதிகாரங்களில் ''தேவையில் இருந்த'' இரண்டு குழுக்கள் மட்டும் குறிப்பாகக் கூறப்படுகின்றன: அப்போஸ்தலர்கள், தங்கள் நேரம் முழுவதையும் பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும் பயன்படுத்தியதால், அவர்களுக்குச் சொந்தமான எந்தப் பணமும் இருக்கவில்லை (அப். 3:6 அ), மற்றும் விதவைகள் (அப். 6:1) இருப்பினும், மற்றவர்களுக்கும் தேவைகள் இருந்தனவென்று நாம் யூகிக்கலாம் (இ.வ. அப். 11:29). [25]வசனபகுதியில் உள்ள வார்த்தை "தேவை" என்பதேயன்றி "விருப்பம்" என்பதல்ல. ஒரு சகோதரனுக்கு (வரையறைக்குட்பட்ட நிலையில்) அடிப்படைத் தேவை களுக்கு உதவி செய்யும் பொறுப்பு எனக்குள்ளது; ஆனால் அவர் விரும்புகிற ஒவ்வொன்றும் பெறுகிறதை நிச்சயப்படுத்திக்கொள்ளும் பொறுப்பு எனக்கில்லை. [26]கலா. 6:10இவ்விடத்தில் பயன்படும் இன்னொரு வசனமாகும்: "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம்." [27]அப். 2:44, 45ல் மறைமுகமாகக் குறிப்பிடப்படும் கொள்கையானது 1 யோவா 3:17ல் ஒரு தகுதியாகவே வலியுறுத்தி கூறப்படுகிறது: நாம் நமது சகோதரர்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டும், ஆனால் அது அவரை வேலையற்று சோம்பித்திரியும்படி செய்து விடக்கூடாது (இ.வ. 2 தெச. 3:10). [28]சபையின் இயல்பாக ஏக சிந்தனையைக் குறிப்பிட லூக்கா பயன்படுத்தும் அநேக குறிப்புகளில் இதுவும் ஒன்றாகும். இப்பண்பை வளர்க்க நாம் முயற்சி செய்ய வேண்டும். [29]பொதுக்கூட்டம் கூடும் இடம் (ஆலயம் போன்ற இடங்கள்) மற்றும் தனிப் பட்ட வீடுகள்

(ரோமர் 16:5; 1 கொரி. 16:19; கொலோ. 4:15; பிலே. 2) உட்படப் பலவகைப்பட்ட இடங்களில் ஆதி சபையார் கூடியுள்ளனர். நாம் அறிந்த வரையில், சபையார் ஆராதிக்க கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு முன் அநேக ஆண்டுகள் இவ்விதமாகவே நிலை இருந்தது. "சபைக் கட்டிடம்" ஒரு மதிப்புள்ள கருவியாக இருக்க முடியும், ஆனால் கர்த்தருடைய ஊழியத்திற்கு இது இன்றியமையாதது என்று ஒருபொழுதும் நாம் எண்ணக் கூடாது. [30]KJVயில் இது "meat" என்றுள்ளது, ஆனால் இது "உண்ணத்தக்க மாமிசம்" என்று பொருள்படாது. "Meat" என்ற ஆங்கில வார்த்தை உணவுக்குப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாகும். NKJVயில் மொழி நடை புதுப்பிக்கப்பட்டு, "உணவு" (food) என்றுள்ளது.

[31]"கபடமில்லாத" என்று மொழியாக்கம் செய்யப்பட்ட கிரேக்க வார்த்தையானது "ஏக மனது" அல்லது "எளிமை" என்ற கருத்தைத் தருவதாய் உள்ளது. [32]ஞாயிற்றுக்கிழமைகளுக்கிடையில் ஒரு முழு வாரம் இருப்பதா ல், பல அமெரிக்க சபைகளில், வழக்கமாகப் புதன்கிழமை களில் ஒரு இடைநாள் வேத வகுப்பு நடைபெறுவதுண்டு. இவ்விடை நாள் வகுப்பு பற்றி வேதத்தில் குறிப்பிட்டுக் கூறப்படவில்லையென்றாலும், அநேக சுட்டிக்காட்டுதல்கள் (இங்குள்ள வேத வசனப்பகுதி போன்றவை) உள்ளன. ஆதி கிறிஸ்தவர்கள் தங்களால் முடிந்தபோதெல்லாம் - வாரத்தின் முதல் நாள் மட்டுமல்லாது - ஆவிக்குரிய ஐக்கியம், தேவனுடைய வசனத்தைக் கற்றல், தேவனை ஆராதித்தல், கிறிஸ்தவ ஆராதனைக்குப் பயிற்சியளித்தல் முதலியவைகளுக்காகக் கூடி வந்தனர். (தேவனால் கட்டளையிடப்பட்ட) கர்த்தருடைய நாளின் கூட்டத்தைத்தவிர, இக்கூட்டங்களுக்கான நேர அட்டவணை தயாரித்தல் - உறுப்பினர்களின் ஆவிக்குரிய தேவைகளை நிறைவு செய்தல் ஆகியவை அந்தந்த சபையின் முன்னோடிகளால் செய்யப்பட வேண்டும். [33]பல விரிவுரையாளர்கள், ஆதி (யூத) கிறிஸ்தவர்கள் ஆலயத்தில் யூதர்களின் ஆராதனையில் தொடர்ந்து பங்கேற்றதாகக் கருதுகின்றனர் - ஒருவேளை கி.பி. 70ல் ஆலயம் அழிக்கப்படும்வரை இது தொடர்ந்திருக்கலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர் - ஆனால் வசனத்தில் இம்முடிவுக்கான ஆதாரம் ஒன்றும் இல்லை. கிறிஸ்தவ யுகத்திற்கான தேவனுடைய சித்தம் உடனடியாக வெளிப்படுத்தப்பட வில்லை என்பது உண்மையே, ஆனாலும் கிறிஸ்தவர்கள் எப்படி ஆராதிக்க வேண்டும் என்று வசனம் 42ல் முதலாவது வெளிப்படுத்தப்பட்டது. வசனம் 47ல் "தேவனைத் துதித்து" என்று குறிப்பிட்டுள்ளதும் உண்மையே, ஆனால் இது, இந்த கிறிஸ்தவர்கள் எங்கு (ஆலயம் அல்லது அவர்களின் வீடுகள்) அதைச் செய்தனர் என்பதைக் கூறாமல் எப்படிச் செய்தனர் என்றே கூறுகிறது. யூதர்களின் துதித்தலோடு இதை வரைமுறைப்படுத்தக்கூடிய சொல்விளக்கம் எதுவும் இல்லை. அப். 5:12ல் "எல்லாரும் ஒருமனப்பட்டுச் சாலமோனுடைய மண்டபத்தில் இருந்தார்கள்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது. சாலோமோனின் மண்டபம், புறஜாதியாரின் முற்றத்தில் இருந்தது. ஆலயத்தில் யூதர்களின் ஆராதனை நடந்த பகுதியில் இது இருக்கவில்லை. [34]இந்த "அப்பம் பிடுதல்" அன்றாடம் செய்யப்பட்டதாலும், கர்த்தருடைய இராப்போஜனம் வாரத்தின் முதல் நாளில் மட்டுமே அருந்தக் கூடியதாலும், இங்கு இச்சொற்றொடர் பொதுவான ஒரு உணவையே குறிப்பிட வேண்டும். ஒன்றாக உணவருந்துதல் என்பது

கிறிஸ்தவ ஐக்கியத்தின் முக்கியமான வெளிப்பாடு ஆகும். இந்த ஐக்கிய விருந்துகள் "அன்பின் விருந்து" (யூதா 12) என்று அழைக்கப்பட்டன. [35]ஒரு சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாவதால் மட்டுமே அதன் ''வளர்ச்சி'' தேவனைப் பிரியப்படுத்தும் என்று பொருள்படாது. தேவனுக்குப் பிரியமான வளர்ச்சியானது சத்தியத்தை விட்டுக்கொடுத்தலை ஈடுபடுத்தாது. எண்ணிக்கையில் மட்டுமல்ல, ஆவியிலும் நாம் வளர வேண்டுமென்று தேவன் விரும்புகிறார், ஆனால் தேவனுக்கு உண்மையாயிருத்தல் என்பது எண்ணிக்கை வளர்ச்சிக்கு முன்னோடுவதாக உள்ளது. புற்றுநோய்க் கட்டியும் ஒரு வளர்ச்சிதான், ஆனால் அது ஆரோக்கியமற்ற, உயிர் வாழ்வைப் பயமுறுத்தும் ஒரு வளர்ச்சியாகும்.